**கவனிக்க.-** *2023.08.25 ஆந் திகதிய 2347 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வரத்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.-** *இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2023 ஆம் ஆண்டுக்கான குருநாகல் மாவட்டத்தின் நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப் பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகினறது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2348 - 2023 සැප්තැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2023.09.01

*2348 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 796 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2023, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

795 - B82491 - 5,403(2023/09)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிளவும்

## வடமேல் மாகாணத்தின் மாகாண சபைப் பாடசாலைகளில் காணப்படுகின்ற இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் I (அ) வகுப்பின் வெற்றிடங்களுக்காக மாவட்ட அடிப்படையில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023

வடமேல் மாகாணத்தில் மாகாண சபைப் பாடசாலைகளில் காணப்படும் இலங்கை ஆசிரியர் சேவையின் வெற்றிடங்களுக்காக வடமேல் மாகாண அரச ஆசிரியர் சேவையின் சேவை யாப்பின் அடிப்படையில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் I (அ) வகுப்புக்கு மாவட்ட மட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளதன் படி தகைமை பெற்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களுக்காக மாவட்ட மட்டத்தில் பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன், ஒரு விண்ணப்பதாரிக்கு ஆகக் கூடுதலான உபபட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பாடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும். அந்த ஆட்சேர்ப்பின் போது உரிய மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

2. அவ்வாறாயினும் குருநாகல் மாவட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் குருநாகல் மாவட்டப் பாடசாலைகளில் உள்ள பாட வெற்றிடங்களுக்கும், புத்தளம் மாவட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் புத்தளம் மாவட்டப் பாடசாலைகளில் உள்ள பாட வெற்றிடங்களுக்கும் விண்ணப்பிக்க வேண்டும். ஒரு மாவட்டத்தின் வெற்றிடங்களை நிறைவு செய்வதற்கு தகுதியானவர்கள் போதுமானதாக இல்லாத போது அடுத்த மாவட்டத்தில் அந்த பாடத்திற்கு தகுதியானோரில் இருந்து வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

3. வடமேல் மாகாணத்தில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டு தயாரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்குமான சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களுக்குரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை உபபட்டியலில் காட்டப்பட்டுள்ளது.

4. உபபட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு மூன்று பாடங்களுக்கும் வேறு மாகாணங்களில் வசிப்பவர்களும் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன், தெரிவு செய்யும் போது குறித்த மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஒவ்வொரு பாடத்திற்கும் காணப்படும் வெற்றிடங்களை நிறைவு செய்து கொள்வதற்குப் போதுமான எண்ணிக்கையினர் வடமேல் மாகாணத்தினுள் இல்லாத சந்தர்ப்பத்தில் வடமேல் மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட ஆனால் 03 ஆண்டுகள் வசிக்காதவர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும். அதன் பின்னரும் வெற்றிடங்கள் காணப்பட்டால் மாத்திரம் வேறு மாகாணங்களில் வசிக்கும் அந்தந்தப் பாடங்களுக்கு விண்ணப்பித்த தகைமை பெற்றவர்கள் மூலம் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

5. சம்பள முறைமை

   இந்தப் பதவிக்குரிய சம்பளத் திட்டம் 2022.01.05 ஆம் திகதிய இலக்கம் 03/2016 (IV) இன் GE 1 – 2016 இன் படி ரூபா. 31,490 - 6 x 445 - 7 x 525 - 2 x 600 - ரூபா. 39,035 ஆன ஒருங்கிணைந்த மாதாந்த சம்பளம் வழங்கப்படும் என்பதுடன், இந்த சம்பள அளவுத் திட்டத்தின் 14 ஆம் படிமுறையான ரூபா. 37,835 என்ற சம்பள அளவில் வைத்து சம்பளம் வழங்கப்படும்.

**6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

6.1. கல்வித் தகைமைகள் -

I. கற்பித்தல் நடவடிக்கைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட விஷேடமாக்கப்பட்ட பாடங்களுக்குரியதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் மூலம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான பட்டம் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

II. கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றும் இருக்க வேண்டும்.

***மிக முக்கியம்*** . - ( விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் )

- *தமது பட்டத்தின் அடிப்படையில் விண்ணப்பிக்கக் கூடிய பாடங்கள் தொடர்பில் விண்ணப்பதாரிகள் அவதானம் செலுத்த வேண்டும்.*
- *பட்டத்திற்காக கற்ற பிரதான பாடம் / பாடங்கள் தொடர்பில் மட்டும் குறிப்பிட்ட பாட வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்க வேண்டும்.*
- *விண்ணப்பிக்கக் கூடிய பாடங்களின் உச்ச எல்லை 03 ஆகும். விருப்பின் முன்னுரிமை அடிப்படையில் பாடங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.*
- *விண்ணப்பித்த பாடம் /பாடங்கள் எக்காரணம் கொண்டும் விண்ணப்பித்த பின்னர் மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது.*

*6.2. உடல் மற்றும் உளத் தகைமைகள் -*

*சகல விண்ணப்பதாரிகளும் ஆசிரியர் ஒருவராக கடமையாற்றுவதற்கு தகுந்த உடல், உள ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்.*

*6.3. வயது -*

*விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்த வயதெல்லை 18 ஆகும். ஆகக் கூடிய வயதெல்லை 35 ஆகும்.*

*6.4. ஏனைய தகைமைகள் -*

I. *விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.*

II. *சிறந்த நற்பண்புகளைக் கொண்டவராகவும், உடலாரோக்கியம் மிக்கவராகவும் காணப்பட வேண்டும்.*

III. *வடமேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்ற தயாராக இருக்க வேண்டும்.*

IV. *வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆகக் குறைந்தது அண்மிய 03 வருடங்கள் வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வசிப்பாளர் என்பதை கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் வடமேல் மாகாணத்தில் 03 ஆண்டுகள் வசிப்பாளராக இல்லாத வடமேல் மாகாண விண்ணப்பதாரிகள் வடமேல் மாகாணத்தினுள் நிரந்தரமாக வசித்த காலப் பகுதியை கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் மூலம் நேர்முகப் பரீட்சையின் போது உறுதிப்படுத்த வேண்டும்.*

V. *விண்ணப்பதாரி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு வடமேல் மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொள்ளாதவராக இருந்தாலும், அவரின் வாழ்க்கைத் துணை அண்மிய 03 ஆண்டுகளில் நிரந்தர வதிவைக் கொண்டிருந்தால் அவர்களின் விண்ணப்பமும் 04 ஆவது பிரிவின் அடிப்படையில் கருத்தில் கொள்ளப்படும். (வாழ்க்கைத் துணையின் வதிவிடச் சான்றிதழ் மற்றும் விவாகச் சான்றிதழை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.)*

VI. *ஒவ்வொரு பாட வெற்றிடங்களுக்கும் விண்ணப்பிக்கின்ற வேறு மாகாண விண்ணப்பதாரிகள் தமது வதிவை தத்தமது பிரதேச செயலாளர் பிரிவின் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் ஒன்றை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.*

7. சேவை நிபந்தனைகள்

I. *அரசாங்க / மாகாண அரசாங்க சேவையின் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அந்த யாப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின்* I *(அ) வகுப்புக்கு நியமிக்கப்படுவார்கள்.*

II. *இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்துடைய ஓய்வூதியம் தொடர்பில் அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.*

III. *இப்பதவிக்கு நியமிக்கப்படுவது 03 வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டாகும்.*

IV. *வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை யாப்பின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படும்.*

V. *2020.10.16 ஆம் திகதி அ.நி.சு 18/2020 இன் படி பணியிலமர்ந்து 03 வருடங்களுக்குள் ஊடக மொழிக்கு இரண்டாம் அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.*

VI. நியமனம் பெற்றுக் கொள்வோர் முதல் நியமனம் பெறும் கல்வி வலயத்தினுள் குறைந்த பட்சம் 05 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும். குறித்த காலத்தினுள் இடமாற்றத்தைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க முடியாது.

VII. தமது முதல் நியமனம் பெறும் பாடசாலை கஷ்டப் பாடசாலை / அதி கஷ்டப் பாடசாலையாக இல்லாதவிடத்து தமது சேவைக்காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது குறைந்த பட்சம் 05 வருடங்கள் கஷ்டப் பாடசாலை / அதி கஷ்டப் பாடசாலை ஒன்றில் கடமையாற்றுவதற்கு கடப்பாடுடையவராவார்.

**8. ஆட்சேர்ப்பு :**

8.1. ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறைமை

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை யாப்பின் விதிமுறைகளுக்கு உட்பட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

8.2. எழுத்து மூலப் பரீட்சை - இந்த வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

| பாடம் | உச்ச புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்கு அவசியமான ஆகக் குறைந்த புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொது உளச் சார்பு ( 01 மணித்தியாலம்) | 100 | 40 |
| பொது அறிவுப் பரீட்சை ( 01 மணித்தியாலம் ) | 100 | 40 |

பாடத் திட்டம்

பாட இலக்கம் 01 – பொது உளச்சார்பு சோதனை

விண்ணப்தாரியின் திறன்கள், தர்க்கத் திறன் என்பவற்றை மதிப்பீடு செய்யும் நோக்கில் இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு அல்லது குறு விடை வினாக்கள் 50 ஐ உள்ளடக்கி இருக்கும். இந்த சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
( ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் )

பாட இலக்கம் 02 - பொது அறிவு

சமூக, பொருளாதார, அரசியல் துறைகள் தொடர்பில் பொது அறிவைப் பரீட்சிக்கும் பல்தேர்வு வினாக்கள் 50 ஐக் கொண்டிருக்கும்.
( ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் )

8.3. பரீட்சை விதிமுறைகள் :-

I. இப்பரீட்சைக்கு சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் விண்ணப்பிக்கலாம்.
II. சகல விண்ணப்பதாரிகளும் இரண்டு ( 02 ) வினாப் பத்திரங்களுக்கும் முகங் கொடுக்க வேண்டும்.
III. சகல விண்ணப்பதாரிகளும் சகல வினாப் பத்திரங்களுக்கும் முகங் கொடுக்க வேண்டியது ஒரே மொழி மூலத்திலாகும். அந்த மொழி மூலம் அவர் நியமனம் பெற எதிர்பார்க்கும் மொழி மூலமாக இருக்க வேண்டும்.
IV. ஆங்கில மொழி பாடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் ஆங்கில மொழி மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.
V. விண்ணப்பதாரிக்கு தன்னுடைய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

8.4. நேர்முகப் பரீட்சை :-

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருக்கிறாரா என்பதைப் பரீட்சித்தல், உடல் தகைமை மற்றும் உளத் தகைமையைப் பரீட்சித்தல், பட்டம் வகுப்பு சித்தி மற்றும் மேலதிக தகைமைகள் என்பவற்றுக்கு புள்ளிகளை வழங்குவதற்காக நேர்முகப் பரீட்சை நடைபெறும். குறித்த நேர்முகப் பரீட்சைக்கு எழுத்துப் பரீட்சைப் புள்ளிகளின்

அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கையில் மூன்று மடங்கு விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின் போது விரிவான பட்டச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

( அ ) வகுப்புச் சித்திகளுக்காக புள்ளி வழங்கல் பின்வருமாறு அமையும். ( அதிக பட்சம் 07 புள்ளிகள் )

| | |
|---|---|
| 1 ஆம் வகுப்பு | 07 புள்ளிகள். |
| 11 ஆம் வகுப்பு உயர் | 05 புள்ளிகள். |
| 11 ஆம் வகுப்பு கீழ் | 03 புள்ளிகள் |

(ஆ) மேலதிக தகைமைகளுக்குப் புள்ளிகளை வழங்குதல் ( அதிக பட்சம் 10 புள்ளிகள் )

| தொ.இல | நியதிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01 | தர்மப் பாடசாலை இறுதிப் பரீட்சை சான்றிதழ் அல்லது ஏனைய மதம் ஒன்றிற்கு அதற்குச் சமனான பரீட்சை ஒன்றில் சித்தி பெற்றமையை உறுதி செய்யும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் | 05 |
| 02 | விளையாட்டு, அழகியல் போன்ற இணைப் பாடவிதான செயற்பாடுகளில் அரசின் அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட போட்டி ஒன்றில் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற சான்றிதழைப் பெற்றிருத்தல். | 05 |
| | மொத்தப் புள்ளிகள் | 10 |

8.5. செயன்முறைப் பரீட்சை ( அதிக பட்சம் 08 புள்ளிகள் ) -

செயன்முறைப் பரீட்சையில் விண்ணப்பதாரி விண்ணப்பித்த பாடத்திற்குப் பொருத்தமான தலைப்பு ஒன்றின் கீழ் 05 நிமிடங்களுக்கு குறையாத நிகழ்த்துகை ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இங்கு விண்ணப்பதாரியின் கருத்து வெளியீட்டு திறமை, தொடர்பாடல் திறமை தொடர்பில் விஷேடமாக அவதானம் செலுத்தப்படும். செயன்முறைப் பரீட்சைக்கு வெற்றிடங்களின் எண்ணிக்கையில் இரு மடங்கு விண்ணப்பதாரிகள் அழைக்கப்படுவார்கள்.

**9. பரீட்சை நிலையம் :**

மேற்படி போட்டிப் பரீட்சை பின்வரும் நகரங்களில் நடைபெறும். வடமேல் மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் தான் வசிக்கும் மாவட்டத்திற்கு ஏற்ப நகரத்தை தெரிவு செய்து கொள்ள வேண்டும். ஏனைய மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் தாம் நியமனம் பெற்றுக் கொள்ள விரும்பும் மாவட்டத்தை தெரிவு செய்ய வேண்டும்.

| மாவட்டம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| குருநாகல் | குருநாகல் | 01 |
| புத்தளம் | புத்தளம் | 02 |

**10. தெரிவு செய்யும் முறை:**

( அ ) வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையின் ஆசிரியர் சேவை யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் தெரிவு செய்தல் நடைபெறும்.

( ஆ ) ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி இரண்டு ( 02 ) அல்லது மூன்று ( 03 ) பாடங்களுக்கு தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நியமனம் வழங்கும் பாடம் தொடர்பில் வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழு தீர்மானம் எடுக்கும்.

**11. பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக ரூபா 1200 ஐ வடமேல் மாகாண சபையின் வருமானத் தலைப்பு 2003-02-13 வரவு வைக்கப்படுமாறு வதிவிடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செலுத்தி தன்னுடைய பெயரில் பெற்றுக் கொள்ளும்

வ.மே.மா.ச.நி 2 பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி அனுப்ப வேண்டும். வடமேல் மாகாணத்தில் வசிக்காத விண்ணப்பதாரிகள் வடமேல் மாகாணத்தின் ஏதேனும் ஒரு பிரதேச செயலகத்தில் வடமேல் மாகாண சபையின் வருமானத் தலைப்பு 2003-02-13 வரவு வைக்கப்படுமாறு பணத்தை செலுத்தி வ.மே.மா.ச.நி 2 பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி சமர்ப்பிக்க வேண்டும்.

வ.மே.மா.ச.நி 2 பற்றுச் சீட்டினைத் தவிர வேறு நிறுவனங்களில் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள், காசு என எவையும் பொறுப்பேற்கப்பட மாட்டாது என்பதுடன், அவ்வாறான பற்றுச் சீட்டுக்களை முன்வைக்கும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதையும், எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் இந்த பரீட்சைக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் வேறு எந்தப் பரீட்சைக்கும் பயன்படுத்துவதற்கு மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும். ( பற்றுச் சீட்டின் நிழற் படப் பிரதி ஒன்றை எதிர் கால பயன்பாட்டுக்காக தம்வசம் வைத்துக் கொள்ளலாம். )

**12. விண்ணப்பிக்க வேண்டிய ஒழுங்கு :**

12.1.( அ ) விண்ணப்பங்கள் 21 X 35.5 செ.மீ (லீகல் - Legal ) அளவுள்ள தாள்களைப் பயன்படுத்தி 01 தொடக்கம் 04 வரை முதலாவது பக்கத்திலும் இலக்கம் 05 இலிருந்து மற்றைய பக்கங்களிலும் உள்ளடங்குமாறு விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும்.

( ஆ ) மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்காத விண்ணப்பங்கள், பூரணமற்ற விண்ணப்பங்கள், அடிப்படைத் தகைமை பூர்த்தி செய்யப்படாத விண்ணபங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்ததா என்பது தொடர்பில் விண்ணப்பதாரிகள் கவனம் செலுத்த வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற் படப் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம்.

( இ ) விண்ணப்பித்த பாடம் / பாடங்கள் / மாவட்டம் எக்காரணம் கொண்டும் மாற்றப்பட மாட்டாது என்பதுடன், ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பமே முன்வைக்க முடியும்.

( ஈ ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2023.10.02 ஆகும்.

12.2. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.

விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு ஒருவர், முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூபா 41,580 க்கு மேற்பட்ட ஆரம்ப அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரச/ மாகாண அரச சேவையின் பதவி நிலை அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

12.3. முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2023.10.02 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் / கூரியர் தபாலில் அனுப்பப்பட வேண்டும். இத்திகதியின் பின்னர் எந்த ஒரு விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

செயலாளர்,
வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
வடமேல் மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.

விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வடமேல் மாகாண ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2023"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

12.4. முறையாக பரீட்சைக் கட்டணம் செலுத்தி 2023.10.02 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிச் சீட்டு வழங்கப்படும். ஆனாலும் இந்தப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படலானது மேற்கூறிய தகைமைகளை பூர்த்தி செய்தமையை ஏற்றுக் கொண்டதாகக் கருதப்பட மாட்டாது.

*13. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :***

*பரீட்சார்த்திகள் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றும் போது தம் ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்களின் மூலம் உறுதி செய்ய வேண்டும்.*

*( அ ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை*

*அல்லது*

*( ஆ ) செல்லுபடியான கடவுச் சீட்டு / செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்*

*குறிப்பு :- பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்தி ஒருவர் தன்னுடைய ஆளடையாளத்தை உறுதி செய்யத் தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்ற தகுதியற்றவராகக் கருதப்படுவார்.*

*14. விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். அந்தத் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றப்பட இடமளிக்கப்பட மாட்டாது. இந்தப் பரீட்சையின் சட்ட திட்டங்களின் அடிப்படையில் ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என அறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்துவத்தை செல்லுபடியற்றதாக்க முடியும். விண்ணப்பதாரி பொய்யான தகவல்களை வழங்கி இருக்கிறார் என்றோ அல்லது உண்மையான தகவல்கள் வேண்டும் என்றே மறைத்திருக்கிறார் என்றோ தெரிய வந்தால் அவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வடமேல் மாகாண அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.*

*15. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரால் பரீட்சை அனுமதி அட்டையும், பின்னர் நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்கான கடிதங்களும் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையில் சித்தியடையத் தவறும் எவரும் செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட உடனேயே வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் அலுவலக இணையத் தளத்தில் (www.psc.nw.gov.lk) அறிவித்தல் விடுக்கப்படும். எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை நடைபெறும் திகதிக்கு 03 நாட்கள் முன்னர் வரை பரீட்சை அனுமதிச் சீட்டு / அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் அது தொடர்பில் உடனடியாக ' **செயலாளர் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்**' என்ற முகவரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது பின்வரும் விபரங்களை வழங்க வேண்டும்.*

i. *விண்ணப்பதாரியின் பெயர் :*
ii. *முகவரி :*
iii. *தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :*
iv. *விண்ணப்பதாரியின் தொலைபேசி இலக்கம் :*

*16. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் தொடர்பில் அல்லது அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகக் கருதப்படும்.*

*17. இந்தப் பரீட்சையை நடாத்துதல், பிற்போடுதல், இரத்துச் செய்தல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல் அல்லது தெரிவு செய்யாமல் விடுதல் வெற்றிடங்களின் எண்ணிக்கை போன்றவை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.*

*18. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் இணக்கமின்மைகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படுமாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.*

*வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,*

*ஈ.எம்.பி. ஏகநாயக,*
*செயலாளர்,*
*வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.*

*மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,*
*வடமேல் மாகாணம்,*
*2023, ஒகத்து 28.*

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை | குருநாகல் மாவட்டம் | | | புத்தளம் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 1 | இரசாயனவியல் | பூரண கற்கைக் காலத்தினுள் இரசாயனவியலை பிரதான பாடமாக அல்லது ஏனைய பாடமாக மொத்த விடயப் பரப்பினுள் 1/3 ஆக கற்றுப் பெற்றுக் கொண்ட விஞ்ஞானமாணி அல்லது பிரயோக விஞ்ஞானமாணி பொது அல்லது விசேட பட்டம். | √ | √ | √ | √ | √ | √ |
| 2 | பௌதீகவியல் | நான்கு வருட விஷேட பட்டத்தினுள் பிரதான பாடமாக அல்லது விடயப் பரப்பினுள் 1/3 ஆக க.பொ.த (உ.த) பாடத் திட்டத்திற்கு அமைவாகக் கற்றிருத்தல் அல்லது மூன்று வருட விஞ்ஞானமாணி பட்டத்தில் விடயப் பரப்பினுள் 1/3 ஆக பௌதீகவியலைக் கற்றுப் பெற்றுக் கொண்டிருத்தல். | √ | √ | √ | √ | √ | √ |
| 3 | உயிரியல் | நான்கு வருட விஷேட பட்டத்தினுள் பிரதான பாடமாக தாவரவியல் /தாவர உயிரியல்/விலங்கியலைப் பிரதான பாடமாகக் கற்றிருத்தல் அல்லது பிரதான பாடமாக தாவரவியல்/தாவர உயிரியல் அமையும் போது ஏனைய பாடமாக விலங்கியலும், பிரதான பாடம் விலங்கியலாக இருக்கும் போது ஏனைய பாடமாக தாவரவியல் /தாவர உயிரியல் பாடத்தினை குறைந்த பட்சம் இரு வருடங்களாவது உயர் தரப் பாடத்திட்டத்திற்கு இயைபானதாக பெற்றிருத்தல் அல்லது மூன்று வருட விஞ்ஞானமாணிப் பொதுப் பட்டத்திற்காக தாவரவியல் /தாவர உயிரியல் ஆகிய இரு பாடங்களினதும் மொத்தமாக மொத்த பாடப் பரப்பின் 1/3 அளவுக்கு உயர் தரப் பாடத்திட்டத்திற்கு இயைபானதாக கற்றிருத்தல். | √ | √ | √ | √ | √ | √ |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை | குருநாகல் மாவட்டம் | | | புத்தளம் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 4 | விவசாயம் | விவசாயத் தொழில் நுட்பம் மற்றும் முகாமைத்துவம் ( B.Sc. Agriculture Technology and Management ) / விவசாயம் ( B.Sc. Agriculture ) /விவசாய வள முகாமைத்துவமும் தொழில் நுட்பமும் ( B.Sc.Agricultural Resources Management and Technology ) / விவசாய வணிக முகாமைத்துவம் ( B.Sc. Agri Business Management ) /ஏற்றுமதி விவசாயம் ( B.Sc. Export Agriculture ) பற்றிய விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது உயர் தர விவசாய விஞ்ஞானப் பாடத்திட்டத்தின் மொத்தப் பாடப் பரப்பின் 1/3 இனை உள்ளடக்கியதான எந்தவொரு விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல். | √ | √ | | √ | | |
| 5 | இணைந்த கணிதம் | நான்கு வருட விஞ்ஞானமாணிப் பட்டத்தில் பிரதான பாடமாக பிரயோக கணிதம் அல்லது தூய கணிதத்தைக் கற்றிருத்தல் அல்லது தூய கணிதத்தைக் கற்றிருத்தல் அல்லது பிரதான பாடம் பிரயோக கணிதமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் ஏனைய பாடமாக தூய கணிதத்தையும் பிரதான பாடமாக தூய கணிதம் இருக்கும் பட்சத்தில் ஏனைய பாடமாக பிரயோக கணிதத்தையும் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகளுக்காவது கற்றிருத்தல் அல்லது மூன்று வருட விஞ்ஞானமாணிப் பொதுப் பட்டத்தில் பிரயோக கணிதம் மற்றும் தூய கணிதம் ஆகிய பாடங்களின் மொத்தம் ஒட்டு மொத்த பாடத் திட்டத்தில் 1/3 அளவுக்கு பயின்று பெற்றுக் கொண்ட பட்டம். | √ | √ | √ | √ | √ | |
| 6 | பொறியியல் தொழில் நுட்பவியல் | பட்டத்தின் மொத்தப் பாடத் திட்டத்தில் 1/3 பங்கு கட்டட நிர்மாணம், எந்திரவியல், மின் அல்லது இலத்திரனியல் ஆகிய பாடங்களை உள்ளடக்கியதாக பட்டப் படிப்பை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் /அல்லது இலத்திரனியல் பாடத்துடன் பொறியியல் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | √ | | √ | | |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை | குருநாகல் மாவட்டம் | | | புத்தளம் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 7 | உயர் முறைமைத் தொழில் நுட்பவியல் | விவசாயத் தொழில் நுட்பமும் முகாமைத்துவமும் ( B.Sc. Agricultural Technology and Management) /விவசாயம் ( B.Sc. Agriculture ) /விவசாய வள முகாமைத்துவமும் தொழில் நுட்பமும் ( B.Sc. Agricultural Resources Management and Technology) விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது உயிர் முறைமைத் தொழில் நுட்பவியல் பட்டம் ( BBST) அல்லது உயர் தர உயிர் முறைமைத் தொழில் நுட்பவியல் பாடத் திட்டத்திற்கு இயைபானதான பாடத் திட்டத்தை மொத்தப் பாடப் பரப்பின் 1/3 பங்கினைப் பாட உள்ளடக்கமாகக் கொண்ட ஏதேனும் ஒரு விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல். | √ | | | | | |
| 8 | தொழில் நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றின் மொத்தப் பாடத்திட்டத்தில் 1/3 பங்கு பௌதீகவியலை உள்ளடக்கிய பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | | | √ | | |
| 9 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பவியல் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் /கணினியியல் தொடர்பான சிறப்புப் பட்டம் அல்லது கணினியியலை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் ( பட்டத்திற்கான மொத்த பாடத் திட்டத்தின் 1/3 பகுதி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்குரியதாக இருக்க வேண்டும் ) | √ | √ | √ | √ | | |
| 10 | ஆங்கிலம் | ஆங்கிலம் தொடர்பான சிறப்புக் கலைமாணிப் பட்டம் அல்லது ஆங்கிலத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட எந்தவொரு பொது கலைமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல். | | | √ | | | √ |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை | குருநாகல் மாவட்டம் | | | புத்தளம் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 11 | அரபு | குறித்த பாடத்தினைக் கொண்ட வெளிநாட்டு மொழிப் பட்டம் அல்லது குறித்த பாடத்திற்கு விஷேட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | | √ | | | | |
| 12 | பிரான்சிய மொழி | | √ | | | | | |
| 13 | சீன மொழி | | √ | | | | | |
| 14 | ஜப்பான் மொழி | | √ | | | √ | | |
| 15 | ஜேர்மன் மொழி | | √ | | | | | |
| 16 | ரஷ்ய மொழி | | √ | | | | | |
| 17 | ஹிந்தி | | √ | | | | | |
| 18 | கொரிய மொழி | | √ | | | √ | | |
| 19 | சிறுவர் உளவியல் மற்றும் பாதுகாப்பு | சிறுவர் உளவியல் /சிறுவர் உளவியல் மற்றும் பாதுகாப்பு பாடத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | | | √ | √ | |
| 20 | சுகாதாரமும் சமூக பாதுகாப்பும் | சுகாதார விருத்தி விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் அல்லது சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு பாடத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | | | √ | √ | |
| 21 | உடற் கல்வியும் விளையாட்டும் | உடற்கல்வி தொடர்பான சிறப்புப் பட்டம் /விளையாட்டியல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் /உடற்கல்வி மற்றும் விளையாட்டு பாடத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | | | √ | √ | |
| 22 | அரங்கேற்றக் கலை | அரங்கேற்றக் கலை தொடர்பான சிறப்பு பட்டம் அல்லது கலைமாணி சிறப்புப் பட்டம் அல்லது அரங்கேற்றக் கலை / நுண்கலை /நடனம் /இசை அல்லது நாடகமும் அரங்கியலும் தொடர்பான கலைமாணி சிறப்பு பட்டம் அல்லது கல்வியியல் பட்டம் நாடகமும் அரங்கியலும் அல்லது அரங்கேற்றக் கலை அல்லது நுண்கலையினை பிரதான பாடமாகப் பயின்ற சிறப்புப் பட்டம் | √ | | | | | |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை | குருநாகல் மாவட்டம் | | | புத்தளம் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 23 | கைவினைக் கலை | ஓவியம், சிற்பம், அச்சுக் கலை, புடவை மற்றும் புடவை தொடர்பான கலைகள் உள்ளிட்ட காட்சிக் கலைகள் தொடர்பான சிறப்புப் பட்டம் அல்லது ஓவியக் கலை மற்றும் கிரபிக் தொடர்பான காட்சிக் கலைகள் மற்றும் திட்டமிடல் தொடர்பான சிறப்புப் பட்டம் அல்லது காட்சி மற்றும் தொழில் நுட்பக் கலை தொடர்பான சிறப்புப் பட்டம் அல்லது ஓவியக் கலை /கிரபிக் /சிற்பம் /காட்சி மற்றும் தொழில்நுட்பக் கலை போன்ற பாடங்களில் ஒன்றை பாடமாக அல்லது பிரதான பாடமாகக் கொண்டு பெற்றுக் கொண்ட கலைமாணி அல்லது நுண்கலைமாணி சிறப்புப் பட்டம். | | | | √ | | |
| 24 | உள்ளக உட்கட்டமைப்பு | கட்டட நிர்மாண நுட்பம் தொடர்பான விஞ்ஞானமாணி வடிவமைப்பியல் இளமாணிப் பட்டம் அல்லது கட்டட நிர்மாணம் தொடர்பான பட்டம் அல்லது உள்ளக வடிவமைப்பு பாடத்தினைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | | | | √ | | |
| 25 | நவநாகரீக வடிவமைப்பு | ஜவுளி மற்றும் ஆடை வடிவமைப்புக் கலை தொடர்பான காட்சிக் கலையியல் சிறப்புப் பட்டம் /வடிவமைப்பியல் பட்டம் /நவநாகரீக வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு ஊக்குவிப்பு பாடத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | | | √ | | |
| 26 | கிரபிக் வடிவமைப்பு | கிரபிக் வடிவமைப்பினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் அல்லது வடிவமைப்பியல் பட்டம் /காட்சிக் கலை மற்றும் திட்டமிடல் தொடர்பான கலைமாணிப் பட்டம் ( சித்திரம் மற்றும் கிரபிக் ) /கணினி பொறியியல் நுட்பத்தில் பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டம் /கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் /தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பவியலில் விஞ்ஞானமாணி பட்டம் /தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் /கணினி விஞ்ஞானத்தைப் பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம் ( மேலே குறிப்பிட்ட பட்டப் பாடநெறிகளின் மொத்த பாடப் பரப்பில் 1/3 பங்கு கிரபிக் வடிவமைப்பு தொடர்பான பாடப் பரப்புக்களைப் பயின்றிருக்க வேண்டும் ) | √ | | | √ | | |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை | குருநாகல் மாவட்டம் | | | புத்தளம் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 27 | நிலத் தோற்ற உருவாக்கம் | தோட்டக்கலையியல் /நிலத் தோற்ற உருவாக்கம் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய விவசாய விஞ்ஞானப் பட்டம் அல்லது நிலத் தோற்ற உருவாக்கத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றிருத்தல். | √ | √ | | √ | | |
| 28 | பிரயோக தோட்டக்கலை தொழில் நுட்பக் கல்வி | தோட்டக்கலையியல் /நிலத் தோற்ற உருவாக்கம் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய விவசாய விஞ்ஞானப் பட்டம் அல்லது நிலத் தோற்ற உருவாக்கத்தைப் பிரதான பாடமாக்க கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றிருத்தல். | √ | | | √ | | |
| 29 | கால்நடை உற்பத்தி தொழில் நுட்பக் கற்கை. | விலங்கியல் /கால்நடை உற்பத்தித் தொழில் நுட்பம் தொடர்பான விவசாய விஞ்ஞானப் பட்டம் அல்லது கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடியியல் தொடர்பான பட்டம் /கால்நடை வளர்ப்பு தொழில் நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | | | | | |
| 30 | உணவு உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி | உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பவியல் பட்டம் அல்லது உணவு மற்றும் போசணை தொடர்பான பட்டம் அல்லது உணவு விஞ்ஞானம் /உணவு உற்பத்தி தொழில் நுட்பப் பாடத்தை உள்ளடக்கிய விவசாய விஞ்ஞானப் பட்டம் அல்லது உணவு உற்பத்தி தொழில் நுட்பம் /உணவு தயாரிப்புத் தொழில் நுட்பவியலை பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | | | √ | | |
| 31 | நீரியல் வளத் தொழில் நுட்பக் கல்வி | நீரியல் வள முகாமைத்துவம் மற்றும் விலங்கியல் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது விலங்கியல் /கால்நடை உற்பத்தி தொழில் நுட்பம் /நீரியல் வள தொழில் நுட்பவியல் பாடத்தை ஒரு பாடமாகக் கொண்ட விவசாய விஞ்ஞானப் பட்டம் அல்லது விலங்கு வளர்ப்பு மற்றும் மீன் வள விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமாணி பட்டம் அல்லது மீன்பிடி மற்றும் கடலியல் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது நீரியல் வள தொழில் நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | | | | | |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை | குருநாகல் மாவட்டம் | | | புத்தளம் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 32 | பெருந்தோட்டப் பயிர் உற்பத்தித் தொழில் நுட்பக் கல்வி | ஏற்றுமதி விவசாயம் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது பெருந்தோட்டப் பயிர் உற்பத்தி தொழில் நுட்பத்தை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | | | √ | | |
| 33 | நிர்மாணத் தொழில் நுட்பக் கல்வி | சிவில் பொறியியல் நுட்பம் தொடர்பான பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது நிர்மாணிப்பு மற்றும் கட்டட சேவைத் தொழில் நுட்பவியல் பாடத்தைக் கொண்ட பொறியியல் தொழில் நுட்பவியல் பட்டம் அல்லது தொழில் நுட்பவியல் பட்டம் அல்லது நிர்மாணத் தொழில் நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் அல்லது ஏதேனும் ஒரு பட்டத்துடன் இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு அதிகமான காலத்தைக் கொண்டதும் அல்லது குறைந்த பட்சம் NVQ 4 அல்லது அதற்கு மேற்பட்ட மட்ட நிர்மாணிப்பு தொழில் நுட்பக் கற்கை தொடர்பான டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | √ | | √ | √ | |
| 34 | மோட்டார் எந்திரவியல் தொழில் நுட்பக் கல்வி | மோட்டார் எந்திரவியல் தொழில் நுட்பப் பட்டம் அல்லது மோட்டார் எந்திரவியல் விஞ்ஞான பொறியியல் பட்டம் அல்லது மோட்டார் எந்திரவியல் தொழில் நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | √ | | √ | √ | |
| 35 | மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி | மின் மற்றும் மின்னணுப் பொறியியல் நுட்பம் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது பொறியியல் தொழில் நுட்பவியல் பட்டம் அல்லது பிரயோக இலத்திரனியல் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் அல்லது மின் மற்றும் இலத்திரனியல் தொழில் நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | √ | | √ | | |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை | குருநாகல் மாவட்டம் | | | புத்தளம் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 36 | கைத்தறி மற்றும் ஆடை உற்பத்தித் தொழில் நுட்பக் கல்வி | வடிமைப்புக் கலைப் பட்டம் அல்லது புடவை மற்றும் ஆடைத் துறையில் விஞ்ஞானமாணி பொறியியல் பட்டம் அல்லது தொழில் நுட்பவியல் பட்டம் அல்லது புடவை மற்றும் ஆடை தொழில் நுட்பத்தை ஒரு முக்கிய பாடமாகப் பயின்ற பட்டம். | | √ | | | | |
| 37 | உலோக தயாரிப்புத் தொழில் நுட்பக் கல்வி | இயந்திர தொழில் நுட்பவியல் பட்டம் அல்லது எந்திர தொழில் நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட பொது இளமாணிப் பட்டம் அல்லது உலோக தயாரிப்புத் தொழில் நுட்பத்தினை பிரதான பாடமாக பயின்ற பட்டம் அல்லது ஏதேனும் ஒரு பட்டத்துடன் குறைந்த பட்டம் NVQ 3 அல்லது அதற்கு அதிகமான தரத்தில் உலோகத் தயாரிப்புத் தொழில் நுட்பத்தில் டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | | | | | |
| 38 | அலுமினிய வார்ப்புத் தொழில் நுட்பக் கல்வி | சிவில் / கட்டுமானம் / எந்திரவியல் பாடங்களை உள்ளடக்கிய தொழில் நுட்பவியல் பட்டம் அல்லது அலுமினியம் வார்ப்புத் தொழில் நுட்பத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் அல்லது ஏதேனும் பட்டம் ஒன்றுடன் குறைந்த பட்சம் NVQ 3 அல்லது அதற்கு மேல் மட்ட அலுமினியம் வார்ப்புத் தொழில் நுட்பம் தொடர்பான டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல். | | √ | | √ | | |
| 39 | கணினி வன்பொருள் மற்றும் வலையமைப் பாக்கல் | மூன்று வருட காலத்தைக் கொண்ட தகவல் தொழில் நுட்ப / கணினியியல் / கணினி பொறியியல் பாடத்தை உள்ளடக்கிய பட்டம் (அந்தப் பட்டத்திற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயப் பரப்புக்களை பயின்றிருத்தல் ) அல்லது மூன்று வருட காலத்தைக் கொண்ட தகவல் தொழில் நுட்ப / கணினியியல் / கணினி பொறியியல் பாடத்தை உள்ளடக்கிய பட்டம் ( அந்தப் பட்டத்திற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயப் பரப்புக்களை பயின்றிருத்தல்) அல்லது கணினியியலைப் பிரதான பாடமாகப் பயின்று பெற்றுக் கொண்ட விஞ்ஞானமாணி / தொழில்நுட்பவியல் / பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் மற்றும் அதன் மொத்த பாடத் திட்டத்தில் 1/3 பங்குக்கு பின்வரும் விடயப் பரப்புக்களைக் கற்றிருத்தல்<br>**விடயப் பரப்புக்கள்** (i) Computer Hardware (ii) Computer system Engineering (iii) Computer Networks (iv) Computer Architecture (v) Operating System (vi) Electronics Network related Project (vii) Arduino Technology ( viii ) IT Security (ix) Network Security (x) Information Security (xi) Cyber Security (xii) Computer Hardware and network related projects | √ | | | √ | √ | |

| தொடர் இலக்கம் | பாடம் | கல்வித் தகைமை | குருநாகல் மாவட்டம் | | | புத்தளம் மாவட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் |
| 40 | சுற்றுலா மற்றும் உபசரிப்பு | சுற்றுலா முகாமைத்துவத்தில் சிறப்பு பட்டம் அல்லது சுற்றுலா மற்றும் உபசரிப்பு சேவைகள் ஓய்வு முகாமைத்துவம் தொடர்பான நிர்வாகவியல் சிறப்பு இளமாணிப் பட்டம் அல்லது வணிக உபசரிப்பு சுற்றுலா வணிக சம்பவங்கள் தொடர்பான முகாமைத்துவப் பட்டம் அல்லது சுற்றுலா முகாமைத்துவப் பட்டம் அல்லது சுற்றுலா மற்றும் கலாசார வள முகாமைத்துவப் பட்டம் அல்லது சுற்றுலா உபசரிப்பு பாடத்தைப் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | | | √ | √ | |
| 41 | விசேட கல்வி | விசேட கல்வி தொடர்பான பட்டம் இடைத் தொடர்புக் கற்கைகள் தொடர்பான பட்டம் பேச்சு மற்றும் கேட்டல் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது சிறுவர் உளவியலை ஒரு பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். | √ | | | √ | | |

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்காக [ ]

**வடமேல் மாகாணத்தின் மாகாண சபைப் பாடசாலைகளில் காணப்படுகின்ற இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் தரத்தின் I (அ) வகுப்பின் வெற்றிடங்களுக்காக மாவட்ட அடிப்படையில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2023**

1. நிரந்தர வதிவு

| வடமேல் மாகாணத்தினுள் வசிப்பவராயின் | ஏனைய மாகாணங்களில் வசிப்பவராயின் |
|---|---|
| நிரந்தர வதிவு மாவட்டம் : [ ] | நிரந்தர வதிவு மாகாணம் : [ ] |
| நகர இலக்கம் : [ ] | விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் மாவட்டம் : [ ] |
| நகர இலக்கம் : குருநாகல் 01<br>புத்தளம் 02 | நகர இலக்கம் : [ ] |

2. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் [ ]

சிங்களம் - S, தமிழ் -T, ஆங்கிலம் - E
( நியமனம் பெற்றுக் கொள்ள உத்தேசிக்கும் மொழி மூலத்திற்குரிய எழுத்தை கட்டத்தினுள் எழுதுக. )

3.

| முன்னுரிமை ஒழுங்கு | விண்ணப்பிக்கும் பாடம் /பாடங்கள் | விடய இலக்கம் |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |

( விண்ணப்பிக்கக் கூடிய பாடங்களின் உச்ச எண்ணிக்கை 03 ஆகும் )

4. தனிப்பட்ட தகவல்கள்

4.1. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம் / தமிழில் ) : ..................................................................
..................................................................................................................

4.2. முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில கப்பிடல் எழுத்துக்களில்) : ...................................................
..................................................................................................................

4.3. முழுப் பெயர் ( சிங்களம் / தமிழில் ) : ..............................................................................
..................................................................................................................

4.4. முழுப் பெயர் ( ஆங்கில கப்பிடல் எழுத்துக்களில் ) : ..............................................................
..................................................................................................................

4.5. தற்போதைய முகவரி (சிங்களம் / தமிழில் ) : .........................................................................
..................................................................................................................

( பரீட்சை அனுமதிச் சீட்டு இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும் )

4.6. தற்போதைய முகவரி (ஆங்கில கப்பிடல் எழுத்துக்களில் ) : ..........................................................................
..........................................................................................................................................

4.7. தொலைபேசி இலக்கம் : ..........................................................................................

4.8. வட்ஸ்அப் (Whatsapp ) இலக்கம் : ..........................................................................................

4.9. வதியும் பிரதேச செயலாளர் பிரிவு : ..................... கிராம அலுவலர் பிரிவு : .....................................

4.10. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

( உரிய கட்டத்தினுள் எழுதவும் )

4.11. பிறந்த திகதி : ஆண்டு: [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

4.12. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு வயது :

: ஆண்டுகள் : [ ][ ] மாதங்கள் : [ ][ ] நாட்கள் : [ ][ ]

4.13. பால் : ஆண் - M பெண் - F [ ]

( உரிய எழுத்தினை கட்டத்தினுள் எழுதுக )

4.14. விவாக அந்தஸ்த்து : திருமணமாகாதவர் - 1 [ ]

திருமணமானவர் - 2

( உரிய இலக்கத்தினை கட்டத்தினுள் எழுதுக )

5. பெற்றுக் கொண்டுள்ள பட்டம் தொடர்பான விபரம் :

5.1. பட்டம் : ..........................................................................................................

5.2. பட்டம் பெற்றுக் கொண்ட பல்கலைக் கழகம் : ..........................................................................

5.3. பட்டத்திற்காக பயின்ற பிரதான பாடம் / பாடங்கள் :

| |
|---|
| |
| |
| |
| |
| |

5.4. பெற்றுக் கொண்ட வகுப்பு : ..........................................................................................

5.5. பட்டம் செல்லுபடியாகும் திகதி : ..........................................................................................

5.6. பட்டம் பயின்ற மொழி மூலம் : ..........................................................................................

5.7. க. பொ. த ( சா . த )

| | சித்தியடைந்த ஆண்டு | பரீட்சை சுட்டெண் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |

| | பாடங்கள் | முதலாம் முறை | இரண்டாம் முறை |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |
| 04 | | | |
| 05 | | | |
| 06 | | | |
| 07 | | | |
| 08 | | | |
| 09 | | | |
| 10 | | | |
| | | | |

5.8. க. பொ. த ( உ . த )

சித்தியடைந்த ஆண்டு :- ........................

பரீட்சை சுட்டெண் :- ........................

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் விபரம்.

6.1. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலாளர் அலுவலகம் : ..........................................................

6.2. பற்றுச் சீட்டின் இலக்கமும் திகதியும் : ..........................................................................................

6.3. செலுத்திய கட்டணம் : ..........................................................................................................

பற்றுச் சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்

( பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றை தம் வசம் வைத்துக் கொள்ளவும் )

7. விண்ணப்பதாரியின் உறுதியுரை

( அ ) பரீட்சைக் கட்டணத்துக்குரிய உரிய பணம் பிரதேச செயலகத்தில் செலுத்தப்பட்டு பெறப்பட்ட அதன் பற்றுச் சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சை தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகம் / வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழு விதிக்கும் சட்ட திட்டங்களுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

(ஆ) இந்த விண்ணபத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையிலும் நம்பிக்கையின் படியும் உண்மையானதும் சரியானதும் என்றும் இதன் சகல பகுதிகளையும் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தத் தகவலையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன் என தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு ஏதேனும் ஒரு பகுதியில் பூரணப்படுத்தப்படாமல் / பிழையாக நிரப்பப்படுவதால் ஏற்படும் இழப்பை ஏற்றுக் கொள்கிறேன்.

( இ ) என்னால் வழங்கப்படும் இவ்வுறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் நியமனத்திற்கு முன்னரே தகுதியற்றவர் என்பதை நான் அறிவேன். நான் குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் தெரிய வந்தால் நான் பணி நீக்கம் செய்யப்படலுக்கு உட்படுத்தப்படுவேன் என்பதை அறிவேன்.

திகதி : .............................                                    ......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

8. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ............................................................ என்பவரை எனக்கு தனிப்பட்டமுறையில் தெரியும் எனவும், அவர் எனது முன்னிலையில் ............................... ஆம் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் எனவும், பற்றுச் சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

....................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ..............................................................................
பதவி : ..............................................................................
முகவரி : ..............................................................................
( உத்தியோகபூர்வ முத்திரையை பதியவும் )
திகதி : ..............................................................................

9. விண்ணப்பதாரி அரச சேவையின் உத்தியோகத்தர் ஒருவராயின் திணைக்களத் தலைவரின் உறுதியுரை

திரு./திருமதி/செல்வி .................................................. இன் விண்ணப்பத்தை முன்வைக்கிறேன். அவர் இந்த அமைச்சின் / திணைக்களத்தில் நிரந்தர /தற்காலிக / சமயாசமய ஊழியராகப் பணியாற்றுகிறார் என்பதையும் அந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை பணியிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

....................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

பதவி :- ..............................................................................
முகவரி :- ..............................................................................
( உத்தியோகபூர்வ முத்திரையை பதியவும் )
திகதி :- ..............................................................................

09-141

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

***அட்டவணை - 2023***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | *01.09.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *18.08.2023* |
| | | வெள்ளி | *08.09.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *25.08.2023* |
| | | வெள்ளி | *15.09.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *01.09.2023* |
| | | வெள்ளி | *22.09.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *08.09.2023* |
| | | புதன் | *27.09.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *15.09.2023* |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | *06.10.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *22.09.2023* |
| | | வெள்ளி | *13.10.2023* | .. | நண்பகல் 12 | புதன் | *27.09.2023* |
| | | வெள்ளி | *20.10.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *06.10.2023* |
| | | வெள்ளி | *27.10.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *13.10.2023* |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | *03.11.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *20.10.2023* |
| | | வெள்ளி | *10.11.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *27.10.2023* |
| | | வெள்ளி | *17.11.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *03.11.2023* |
| | | வெள்ளி | *24.11.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *10.11.2023* |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி 02 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*